# நிஹால் ஸ்ரீ அமரசேகரவின் 14 புத்தக தொடர் தொகுப்புக்களின் சாராம்சம்,தமிழ் மொழியில்

*வாசகர்களுக்கு இலகுவான நடையில் ஆய்வு செய்யப்பட்ட, சிக்கலான சம்பவங்களின் அடிப்படையிலான 14 புத்தகங்களின் சாராம்சங்களின் தொகுப்பு - ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கெதிரான மாநாட்டின் குறிப்பான சான்றாதாரங்களுடன்*




**கொழும்பு,இலங்கை -** நூலாசிரியர் நிஹால் ஸ்ரீ அமரசேகரவின் அண்மைய வெளியீடான "ஆராய்வு செய்யப்பட்ட உண்மை நிகழ்வுகள் மற்றும் நடைமுறை யதார்த்தங்கள், ஊழல் மற்றும் மோசடி, பொருளாதாரக்குற்றம், பொது நிதி, ஆட்சி மற்றும் சட்ட அமுலாக்கம் ஆகியவற்றின்: சாராம்சங்கள் (தமிழ் மொழியில் )" (*UK இன் ஒத்தர் ஹவுஸ் இனால் வெளியிடப்பட்டது*) நூலாசிரியரின் 14 புத்தகத்தொடர்களின் சாராம்சங்களின் தொகுப்பானது தமிழ் மொழியில் உள்ளடக்கியுள்ளது. இச் சாராம்சங்களாவன இலகுவான, வாசகர்களுக்கு புரியும்படியான சிறுகதை வடிவில், வாசிக்கும் பொதுமக்களின் நலனுக்காக இவர்கள் மீதான அக்கறையின் விளைவாகவே நூலாசிரியரால் மேற்குறித்த விடயங்களை கூர்மையாக ஆராயும் விதத்தில் தொகுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியில் பாராட்டைப் பெற்ற நூலாசிரியரின் 14 புத்தகங்களும், அளவில் பெரிதாய் இருப்பதின் பொருட்டு அவற்றின் சாராம்சங்கள் ஒரு புத்தகமாக தொகுக்கப்பட்டுள்ளது. கல்வி மற்றும் தொழிற்சார் துறையினருக்கும் தடயவியல் மற்றும் ஊழல் மோசடி பொருளாதாரக்குற்றம் என்பனவற்றின் புலனாய்வு போன்றவற்றில் ஈடுபடுவோருக்கும், நல்லாட்சி, பொதுநிதி, மற்றும் சட்ட அமுலாக்கம் என்பனவற்றினை உறுதிப்படுத்துவோருக்காகவும் , ஆதாரங்கள் மற்றும் சிக்கலான ஆவணங்கள் போன்றவற்றை உள்ளடக்கி ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கெதிரான மாநாட்டின் குறிப்பான சான்றாதாரங்களுடன் தொகுக்கப்பட்டுள்ளது.

நூலாசிரியர் சமூக பொருளாதார யதார்த்தங்களை வெளிப்படுத்துவதோடு வறுமைக்கான மூல காரணமாக நியாயமான முறையிலும் சட்ட ரீதியாகவும் பாரிய பெரும்பான்மை மக்களுக்கு சொந்தமான வளங்கள் அரசியல் சமூக ரீதியாக வலுமிக்கதும் பேராசைகொண்டதுமான ஒரு சிலரால் கொள்ளையடிக்கப்படுவதே காரணம் என்பதனையும் வெளிப்படுத்துகின்றார்.

இந்நிலைமை உலகளாவிய ரீதியில் இவ்வறுமை பரவுவதற்கு வழிவகுத்ததெனவும் மனித உரிமைகள் மீறப்படவும்,அடிப்படை உரிமைகளான வாழ்வாதாரம், உணவு, உறைவிடம், உடை மருத்துவம் மற்றும் கல்வி என்பன அதிகளவிலான வறியவர்களுக்கு மறுக்கப்பட வழிவகுக்கிக்கும் சில நியாயமான கிளர்ச்சிகளுக்கும் வழிகோலியது எனவும், இக்கிளர்ச்சியின் விளைவாக மனிதாபிமானத்தின் பரிதாபகரமான நிலையையும் அக்கிளர்ச்சிகளை அடக்குவதற்காக அரசியல் சமூக ரீதியில் அதிகாரமுள்ளவர்களால் எடுக்கப்படும் முயற்சிகளும் முரணானமுறையில் வறிய பெரும்பான்மை மக்களின் வளங்களை பயன்படுத்துவதன் மூலமே முன்னெடுக்கப்படுகின்றதென்பதை நூலாசிரியர் அனுமானித்திருக்கிறார்.

**"ஆராய்வு செய்யப்பட்ட உண்மை நிகழ்வுகள் மற்றும் நடைமுறை யதார்த்தங்கள், ஊழல் மற்றும் மோசடி, பொருளாதாரக்குற்றம், பொது நிதி, ஆட்சி மற்றும் சட்ட அமுலாக்கம் ஆகியவற்றின்: சாராம்சங்கள் (தமிழ் மொழியில் )" - நிஹால் ஸ்ரீ அமரசேகர**

**மென் அட்டை | 8.25x11in | 300 பக்கங்கள் | ISBN 9781524681470**
**இலத்திரனியல் புத்தகம் | 300 பக்கங்கள் | ISBN 9781524681500**
**கிடைக்குமிடங்கள் - அமேசான் மற்றும் பார்ன்ஸ் & நோபல்**

**நூலாசிரியரைப் பற்றி.**

நிஹால் ஸ்ரீ அமரசேகர அரச மற்றும் தனியார் துறையினரால் நன்கு அறியப்பட்ட ஒரு பல் தொழிற் தகைமை கொண்ட தொழில்வல்லுநராவர். சர்வதேச ரீதியில் அறியப்பட்ட இவர் இலங்கையின் ஒரு பொதுநல ஆர்வலருமாவர். இவர் ஒரு சட்டத்துறை சார்ந்தவராக இல்லாத போதிலும் இலங்கையின் உச்ச நீதித்துறையான உச்ச நீதிமன்றத்தின் முன் தோன்றி வெற்றிகரமாக பல பொதுநல வழக்குகளையும் மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக பொறுப்பினடிப்படையிலும் வெற்றிகரமாக வாதாடியுள்ளார். இவர் தடயவியல் கணக்கு ஆய்வு நிபுணராவர். இவர் விரிவான முறையில் உண்மையான வெளிப்பாடுகளை வெளியிட்டுள்ளதுடன் தேசிய மற்றும் பொதுநல விடயங்கள் தொடர்பில் உணர்ச்சிவசப்படாமல் வாதாடியுள்ளார். பொதுச் சொத்துக்களும் நிதியும் பொதுமக்களுடையதும் நம்பிக்கைக்கு பாத்திரமான முறையில் அரசினால் பரிபாலனம் செய்யப்படவும் வேண்டும் என்ற புனித கட்டளையினை ஊக்கத்துடன் கடைப்பிடித்து, அவை மீறப்படுகின்ற இடத்தில் அர்ப்பணிப்புடன் அவற்றுக்கெதிராக அச்சமின்றி அதிகாரமுடைய அரசியல்வாதிகள் அதிகாரமுள்ளோர் மற்றும் வர்த்தகர்களுக்கும் எதிராகப் போராடியுள்ளார். அத்தோடு சமூகம் தொடர்பான பொறுப்பினை உடைய தொழில்வல்லுநர்கள் அதனை மீறி நடக்கின்ற வேளை அவர்களை கண்டித்துமுள்ளார்.